# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 60 | 4 Pages | 30.09.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 60 | 4 பக்கங்கள் | 30.09.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## 5 மாநில தேர்தலில் அதிக எம்.பி.க்களை களமிறக்க பாஜக முடிவு முதல்வர் வேட்பாளர்களை முன்னிறுத்த வாய்ப்பில்லை

புதுடெல்லி,செப்.30

அடுத்த வருடம் வரவிருக்கும் மக்களவை தேர்தலுக்கு முன்பாக ராஜஸ்தான், மத்தியபிரதேசம், சத்தீஸ்கர், தெலங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. மக்களவைத் தேர்தலுக்கான அரையிறுதிப் போட்டியாகக் கருதப்படும் இத்தேர்தலின் வெற்றி மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது. 5 மாநிலங்களில் ம.பி.யில் மட்டுமே பாஜக ஆட்சியில் உள்ளது. மிசோரமில் ஆளும் மிசோரம் தேசிய முன்னணியின் கூட்டணிக் கட்சியாக உள்ளது.



இதனால் நான்கு மாநிலங்களிலும் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க பாஜக பல புதிய திட்டங்களை வகுத்து வருகிறது. இதில், முக்கியமாக தனது எம்.பி.க்களையே அதிக எண்ணிக்கையில் களம் இறக்க முடிவு செய்துள்ளது. இந்த வகையில், ம.பி.யில் 3 மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட 7 எம்.பி.க்கள்வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதேபோல், சத்தீஸ்கரின் 90 சட்டப்பேரவை தொகுதிகளின் பலவற்றிலும் தனது மாநில தலைவரான அருண் சாவ் உள்ளிட்ட பல எம்.பி.க்களை களம் இறக்க பாஜக முடிவு செய்துள்ளது. அர்ஜுன்ராம் மேக்வால்: ராஜஸ்தானிலும் தனது பல எம்.பி.க்களை வேட்பாளர்களாக்க பாஜக திட்டமிடுகிறது. இந்தப் பட்டியலில் மத்திய அமைச்சர்கள் அர்ஜுன்ராம் மேக்வால், கஜேந்திர சிங் ஷெகாவத் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். இத்தனைக்கும் ராஜஸ்தானில் ஒரு கட்சியின் ஆட்சி இரண்டாவது முறையாக தொடராத நிலை பல ஆண்டுகளாக உள்ளது.

இருப்பினும் பாஜக சுணக்கம் காட்டாமல் வெற்றிக்கான தீவிர நடவடிக்கையில் இறங்கி உள்ளது. தெலங்கானாவில் பாஜகவிற்கு4 எம்.பி.க்கள் உள்ளனர். இவர்களில் மத்திய சுற்றுலா அமைச்சர் ஜி.கிஷண் ரெட்டி உள்ளிட்ட அனைவரையும் சட்டப்பேரவை தேர்தலில் நிறுத்தும் வாய்ப்புகள் உள்ளன. எம்.பி.க்களுக்கு உள்ளதேசிய செல்வாக்கு சட்டப்பேரவை தேர்தலில் வெற்றியை பெற்றுத்தரும் என்பது பாஜகவின் அரசியல்கணக்காக உள்ளது. இம்மாநிலத்தில் 2019 மக்களவைத் தேர்தலில் தோல்வி அடைந்தவர்களையும் நிறுத்த பாஜக திட்டமிடுகிறது. பொதுவாக எந்தக் கட்சியாக இருந்தாலும் அதன் எம்எல்ஏக்கள் மீது வாக்காளர்களுக்கு அதிருப்திஏற்படுவது உண்டு. இதனால், அவர்களை தவிர்த்து புதியவர்களுக்கு வாய்ப்பளித்தால் வெற்றியைத் தரும் என்பதும் பாஜகவின் எதிர்பார்ப்பாகி விட்டது. சட்டப்பேரவை தேர்தலில் முதல்வர் வேட்பாளரை முன்னிறுத்துவது பாஜகவின் வழக்கமாக இருந்தது. இந்தமுறைஅக்கட்சியில் முதல்வர்வேட்பாளருக்குகடும்போட்டி நிலவுகிறது.

இதன் காரணமாக, அதிக செல்வாக்குடன் வெற்றிபெறும் எம்.பி. அல்லது தேசியத் தலைவரை தேர்தல் முடிவுக்குப் பிறகுமுதல்வராக தேர்வு செய்யும் நிலைக்கு பாஜக தள்ளப்பட்டு விட்டது. இதன்மூலம், மாநிலங்களில் அதிருப்தி தலைவர்களை சமாளிக்க முடியும் எனவும் பாஜக நம்புகிறது.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பிளின்கனுடன் ஜெய்சங்கர் சந்திப்பு: கனடா பிரச்சினையில் மவுனம்

வாஷிங்டன்,செப்.30

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கனை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்த நிலையில் கனடா பிரச்சினை குறித்து இருவரும் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மவுனம் காத்தது கவனம் பெற்றுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் நிஜார் கொலையால் இந்தியா கனடா இடையே மோதல் வலுத்துள்ள நிலையில் அமெரிக்கா சென்ற வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கனை சந்தித்தார்.

தனது அண்டை நாடான கனடாவும், தெற்காசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக விளங்கும், அதுவும் குறிப்பாக சீனாவை எதிர்கொள்ள முக்கிய பங்காளியாக இருக்கும் இந்தியாவும் உரசலில் உள்ள சூழலில் அமெரிக்கா இந்தச் சர்ச்சையில் மிகக் கவனமாக செயல்படும் நிர்பந்தத்தில் உள்ளது.



இந்தச் சூழலில் அமெரிக்க இந்திய வெளியுறவு அமைச்சர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை சர்ச்சை பற்றி எதுவும் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இருவர் தனிப்பட்ட முறையில் ஆலோசித்தபோது விசாரணையில் கனடாவுக்கு உதவ வேண்டும் என்று இந்தியாவுக்கு பிளின்கன் அறிவுறுத்தியதாக பெயர் குறிப்பிட விரும்பாத வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இருநாட்டு அமைச்சர்கள் சந்திப்பு குறித்துப் பேசிய வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், "நாங்கள் தொடர்ச்சியாக இந்தியாவுடன் இவ்விவகாரம் பற்றிப் பேசி வருகிறோம். விசாரணையில் கனடாவுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளோம்.

இரு நாட்டு அமைச்சர்கள் சந்திப்பின்போது இந்தியாவின் ஜி20 தலைமையேற்பு, இந்தியா மத்திய கிழக்கு ஐரோப்பிய ஒன்றிய பொருளாதார வழித்தடம் உருவாக்குதல் ஆகியன குறித்து பிளின்கனும், ஜெய்சங்கரும் பேசினர், இந்த வழித்தடத்தை உருவாக்குவதில் வெளிப்படையான, நீடித்த, உயர் தர கட்டமைப்பு முதலீடுகள் பற்றி ஆலோசித்தனர்" என்றார்.

முன்னதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வியாழக்கிழமை செய்தியாளர்களை சந்தித்தபோது,

"நிஜார் கொலை வழக்கு விசாரணையில் எங்களுடன் ஒத்துழைக்குமாறு இந்தியாவுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பிளின்கன் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையில் அமெரிக்கர்கள் எங்களுடன் துணை நிற்கின்றனர். கனடா மண்ணில் கனடா குடியுரிமை பெற்ற நபரை இந்திய அரசாங்கம் அதன் முகவர்கள் மூலம் கொலை செய்த பிரச்சினையில் எங்களுடன் துணை நிற்பது எவ்வளவு முக்கியம் என்பதை அமெரிக்கா உணர்ந்திருக்கிறது" என்று கூறியிருந்தார்.

ஆனால், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளின்கனை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்த நிலையில் கனடா பிரச்சினை குறித்து இருவரும் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மவுனம் காத்தது கவனம் பெற்றுள்ளது.

ஏற்கெனவே அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகனின் முன்னாள் உயர் அதிகாரி ஒருவர், கனடாவா இந்தியாவா என்று வந்தால் அமெரிக்காவுக்கு இந்தியாவின் உறவைப் பேணுவதே முக்கியமாக இருக்கும் என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கனடா இந்தியா மோதல் பின்னணி: கனடாவைச் சேர்ந்த சீக்கியத் தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் 18ம் தேதி கனடாவில் உள்ள சீக்கிய குருத்வாராவுக்கு அருகே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும், கனடாவில் உள்ள இந்திய தூதரை வெளியேறஉத்தரவிட்டார். இதற்கு எதிர்வினையாக இந்திய அரசு, இந்தியாவில் உள்ள கனட அதிகாரியை வெளியேற உத்தரவிட்டது. இதனாலேயே கனடாவுக்கு இந்தியாவுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

# வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் நிதியுதவி

## முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

சென்னை,செப்.30

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் நிதி உதவிக்கான காசோலைகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக முதல்வர மு.க.ஸ்டாலின் இன்று (செப்.29) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா 1 லட்சம் ரூபாய்க்கானகாசோலைகளை வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளையும், 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளையும், நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 1000 கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3000 நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான ஆணைகளையும் வழங்கினார்.

தமிழக அரசால் 1955ம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப் பட்டது.

இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தழிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973ம் ஆண்டில் மறைந்த முதல்வர் கருணாநிதியால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழக அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலைவடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல், தமிழக பராம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச்செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு ரூ.1 லட்சம் பொற்கிழி வழங்குதல்: 202122ஆம் ஆண்டுக்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை மானியக் கோரிக்கையில், கலைமாமணி விருது பெற்றவர்களில், வயோதிக நிலையில், பொருளாதாரத்தில் நலிந்து, இன்னலில் வாழ்கின்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக தற்போது வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ.50,000லிருந்து ரூ.1 லட்சம் ஆக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 202223ம் ஆண்டுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட வறிய நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களான கே.கல்யாணசுந்தரம், ச.சமுத்திரம், பார்வதி உதயம், கே. குமரவேல், பா. முத்துசந்திரன், கோ. முத்துலட்சுமி, பி.ஆர். துரை, ரா. கல்யாணசுந்தரம், எம்.எஸ். முகமது மஸ்தான், டி.என். வரலட்சுமி ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 லட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை தமிழக முதல்வர் வழங்கினார்.



தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள்வாங்கிட நிதியுதவி வழங்குதல்: தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கலைஞர்கள் பயன் பெறும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ.10,000 மதிப்பீட்டில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்க 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படும் என்று 202122ஆம் ஆண்டுக்கான சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 202223ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 50 லட்சம் ரூபாய் நிதியுதவியாக வழங்கிடும் அடையாளமாக, தமிழக முதல்வர 5 கிராமியக் கலைஞர்களுக்கு நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

நலிந்த நிலையில் வாழும் 1000 மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி வழங்குதல்: நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்படுத்தி வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 15,063 கலைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, 202021 மற்றும் 202122ஆம் ஆண்டுகளுக்கான தெரிவு செய்யப்பட்ட 1000 நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்கு 1.04.2023 முதல் மாதந்தோறும் ரூ.3,000 வீதம் நிதயுதவி வழங்கிடும் வகையில், தமிழக முதல்வர் 4 நலிவுற்ற மூத்த கலைஞர்களுக்கு மாதந்திர நிதியுதவிக்கானகாசோலைகளைவழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் க. மணிவாசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்உறுப்பினர்செயலர்விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்,

என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் உடலுக்கு முதல்வர் ஸ்டாலின் அஞ்சலி

சென்னை,செப்.30

சென்னை தரமணியில் வைக்கப்பட்டிருந்த மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

நாட்டின் பசுமை புரட்சிக்கு வித்திட்ட வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் வயது முதிர்வு காரணமாக சென்னையில் வியாழக்கிழமை காலமானார். அவருக்கு வயது 98. சுற்றுச்சூழல், வேளாண்மை துறையில் அளப்பரிய பங்காற்றிய எம்.எஸ். சுவாமிநாதனை கவுரவிக்கும் விதமாக, அவருக்குகாவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.



இந்நிலையில், சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக எம்.எஸ்.சுவாமிநாதனின் உடல் வைக்கப்பட்டிருந்தது. தலைமைச் செயலக பணிகளை முடித்துவிட்டு தரமணி சென்ற தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், எம்.எஸ். சுவாமிநாதனின் உடலுக்கு இன்று அஞ்சலி செலுத்தினார். தமிழக அமைச்சர்கள் கே.என். நேரு, முத்துசாமி ஆகியோரும் முதல்வருடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், எம்.எஸ்.சுவாமிநாதனின் மகள், சவுமியா சுவாமிநாதன் மற்றும் அவரது குடும்பத்தினரைச் சந்தித்து பேசிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்களுக்கு ஆறுதல்தெரிவித்தார்.நாளைநடைபெறவுள்ள இறுதிச்சடங்கில் தமிழக அமைச்சர்கள் கலந்துகொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவு: நாட்டின் பசுமை புரட்சிக்கு வித்திட்டவர் புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் (98). கடந்த 1925 ஆக.7ம் தேதி கும்பகோணத்தில் பிறந்த இவர், சென்னை தரமணியில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையை நிறுவி, அதன் தலைவராகவும், ஆலோசகராகவும் இருந்தார்.

மத்திய அரசின் விவசாயிகளுக்கான தேசிய ஆணையத்தலைவர், உணவு பாதுகாப்புக்கான சர்வதேச குழுவின் (CFS) உயர்நிலை நிபுணர் குழு தலைவர், மாநிலங்களவை உறுப்பினர், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமைஇயக்குநர்எனபலமுக்கியபதவிகள், பொறுப்புகளை வகித்தவர். பத்ம விபூஷன், ராமன் மகசேசே விருது உட்பட பல உயரிய விருதுகளை பெற்றவர்.இவர் கடந்த சில நாட்களாக வயது முதிர்வு காரணமாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், சென்னை தேனாம்பேட்டை ரத்னா நகரில் உள்ள தனது இல்லத்தில் நேற்று காலை 11.20 மணி அளவில் காலமானார்.

# திருவண்ணாமலையில் 2வது நாளாக லட்சக்கணக்கான பக்தர்கள் விடிய விடிய கிரிவலம்



திருவண்ணாமலை, செப்.30

புரட்டாசி மாத பவுர்ணமியையொட்டி திருவண்ணாமலையில் இன்று 2வது நாளாக லட்சக்கணக்கான பக்தர்கள் விடிய விடிய கிரிவலம் வந்தனர். பஞ்சபூத தலங்களில் அக்னி தலமாகவும், நினைத்தாலே முக்தி த்தரும் திருத்தலமாகவும் விள ங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் ஒவ்வொரு பவுர்ணமியன்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்து விட்டு கிரிவலம் வருகின்றனர். புரட்டாசி மாத பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் நேற்று மாலை 6.47 மணிக்கு தொடங்கி இன்று மாலை 4.34 மணிக்கு நிறைவடைவதாக அண்ணாமலையார் கோயில் நிர்வாகம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதன்படி நேற்று காலையில் இருந்தே பக்தர்கள் கிரிவலம் செல்ல தொடங்கினர். நேற்று மாலை 6 மணிக்கு பிறகு கிரிவல பக்தர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்காக அதிகரித்தது. விடியவிடிய இன்று 2வது நாளாக ஏராளமான பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர். இதனால் கிரிவலப்பாதை அமைந்துள்ள 14 கிமீ தூரமும் பக்தர்கள் வெள்ளத்தால் நிறை ந்துள்ளது. கிரிவலப்பாதையில் அமைந்துள்ள அஷ்ட லிங்க சன்னதிகள், அடி அண்ணாமலை கோயில், இடுக்குப் பிள்ளையார் கோயில்களை வழிபட்டபடி பக்தர்கள் கிரிவலம் சென்றனர்.

பவுர்ணமியையொட்டி முன்னுரிமை தரிசனம், கட்டண தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளதால் தரிசன வரிசையில் சுமார் 4 மணி நேரம் காத்திருந்து சுவாமியை பக்தர்கள் தரிசனம் செய்தனர். பவுர்ணமியொட்டி தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. திருவண்ணாமலை நகரின் முக்கிய சாலைகளில் 9 தற்காலிக பஸ் நிலையங்கள் செயல்பட்டன. மேலும், வேலூர் கன்டோன்மெண்ட் மற்றும் விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. இந்த வழித்தடங்களில் இயக்கப்பட்ட சிறப்பு ரயில்கள், வேலூர் மற்றும் விழுப்புரத்தில் இருந்து சென்னை பீச் ஸ்டேஷன் வரை நீட்டிக்கப்பட்டன.

# கொளத்தூர் தொகுதியில் 370 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு: அமைச்சர் சேகர்பாபு பங்கேற்பு



பெரம்பூர்,செப்.30

கொளத்தூர் தொகுதியில் 370 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் சேகர்பாபு பங்கேற்று நடத்தி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். தமிழ்நாடு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் கொளத்தூர், திரு விக நகர், எழும்பூர், பெரம்பூர், துறைமுகம் ஆகிய 5 தொகுதிகளில் வசிக்கும் 370 கர்ப்பிணி பெண்களுக்கு இன்று காலை கொளத்தூரில் உள்ள காமராஜர் திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது.

இதில் கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து, நலங்கு வைத்து மகிழ்வித்தனர். இவ்விழாவில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று, 370 கர்ப்பிணி பெண்களுக்கு அட்சதை தூவி வாழ்த்தி, அரசு சார்பில் சீர்வரிசை பொருட்களை வழங்கினார். இவ்விழாவில் அமைச்சர் சேகர்பாபு பேசுகையில், பெண்களைப் போற்றும் நாடு முன்னேறும். தமிழ்நாட்டில் பெண்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப் பார்த்து, இதை பிற மாநிலங்களும் பின்பற்றுகின்றன. பெண்களின்முன்னேற்றத்துக்கு பக்கபலமாக இருக்கும் முதல்வர் ஸ்டாலின், அவர்களின் போராளியாகவும் திகழ்கிறார்.

திமுக அரசு பொறுப்பேற்றவுடன், பெண்கள் சுயஉதவி குழுவினரின் கடன் ரத்து, நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் இலவசபேருந்து திட்டம், மகளிர் உரிமை தொகை என பல்வேறு திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கி வருவதை பார்த்து, தமிழ்நாட்டை உலகமே வியந்து பார்க்கிறது என்று தெரிவித்தார். இதில் தாயகம் கவி எம்எல்ஏ, மண்டலக்குழு தலைவர் சரிதா மகேஷ்குமார், பகுதி செயலாளர் ஐசிஎப் முரளி, நிலைக்குழு உறுப்பினர் சர்ப ஜெயாதாஸ், தலைமை கழக வழக்கறிஞர் சந்துரு, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் அருணா, உமாமகேஸ்வரி, இந்திரா, வனிதா தேவி, உஷா, லாவண்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் 2வது சீசன் மலர் கண்காட்சி: 7500 தொட்டிகளை கொண்டு 'சந்திரயான்3' வடிவமைப்பு




ஊட்டி,செப்.30

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இரண்டாவது சீசன் மலர் கண்காட்சியை சுற்றுலாத்துறை அமைச்சர் இன்று துவக்கி வைத்தார். 7500 பல வண்ண மலர் தொட்டிகளை கொண்டு சந்திரயான்3 விண்கல வடிவமைப்பு சுற்றுலா பயணிகளை கவர்ந்தது. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நீலகிரி மாவட்டத்திற்கு ஆண்டு முழுவதும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை புரிகின்றனர். சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் நோக்கில் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசனும், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இரண்டாவது சீசனும் நடைபெறுகிறது. நடப்பு ஆண்டுக்கான இரண்டாவது சீசனுக்காக ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா உள்ளிட்ட அனைத்து பூங்காக்களும் தயார் செய்யப்பட்டன.

சுற்றுலா பயணிகள் பார்த்து மகிழ்ந்திடும் வகையில் பூங்காவின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் 4 லட்சம் வண்ண வண்ண மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டன.

இவை தற்போது பூத்து குலுங்குகின்றன. இவற்றை இன்று சுற்றுலா பயணிகள் பார்த்து மகிழ வசதியாக சுற்றுலாத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.

தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: இரண்டாவது சீசனை முன்னிட்டு ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் காட்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மலர் பாத்திகளில் 4 லட்சம் மலர் செடிகளில் வண்ண வண்ண மலர்கள் பூத்து குலுங்குகின்றன. மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இரண்டாம் பருவத்திற்காக டேலியா, சால்வியா, இன்கா மேரிகோல்டு, பிரெஞ்ச் மேரிகோல்டு, டெய்சி, காலண்டுலா, டயான்தஸ், பிரிமுலா, பால்சம், அஜிரெட்டம், சைக்ளமென், ஜெரோனியம், டெல்பினியம், கொச்சியா, ஆந்தூரியம் போன்ற 70 வகைகளில் 21 ஆயிரத்து 500 தொட்டிகளில் நடவு செய்யப்பட்ட மலர்கள் அலங்கார மாடங்களில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் பசுமை தமிழகம் என்பதை வலியுறுத்தி மலர்தொட்டிகளால் 'கோ கிரீன்' என்ற வடிவமைப்பும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேலும் 7500 மலர் தொட்டிகளை கொண்டு புல்வெளியில் இந்தியாவின் பெருமை மற்றும் புகழினை உலகளாவிய அளவில் பறைசாற்றிய சந்திரயான் 3 விண்கல வடிவமைப்பு, நெகிழி பைகளை தவிர்க்கும் வகையில் மீண்டும் மஞ்சப்பை பயன்படுத்த ஊக்குவிக்க 1000 தொட்டிகளை கொண்டு அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இவை சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்துபடைக்கும். இவ்வாறு அமைச்சர் ராமச்சந்திரன் கூறினார்.

# டெங்கு பாதிப்பை கண்காணிக்க 9 சிறப்பு அதிகாரிகளை நியமனம் செய்து சுகாதாரத்துறை இயக்குனர் உத்தரவு



சென்னை,செப்.30

டெங்கு பாதிப்பை கண்காணிக்க 9 சிறப்பு அதிகாரிகளை நியமனம் செய்து பொது சுகாதாரத்துறை இயக்குனர் உத்தரவு அளித்துள்ளார். டெங்கு பாதிப்பை கண்காணிக்க 45 சுகாதார மாவட்டங்களுக்கும் கண்காணிப்பு அதிகாரிகள் நியமனம் செய்துள்ளனர்.

கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர், குமரி, நீலகிரி மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரியாக வடிவேலன் என்பவரை நியமனம் செய்துள்ளனர். காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், நாகை மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரியாக சேகர் நியமனம் செய்தனர். செய்யாறு, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் கண்கா ணிப்பு அதிகாரியாக சோமசுந்தரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார் திருவள்ளூர், பூவிருந்தவல்லி, தென்காசி, விருதுநகர், சிவகாசி கண்காணிப்பு அதிகாரியாக கிருஷ்ணராஜ் நியமனம் செய்துள்ளார். விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, ஆத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி கண்காணிப்பு அதிகாரியாக சம்பத் நியமனம் செய்துள்ளனர். நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருச்சி கண்காணிப்பு அதிகாரியாக விஜயலட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார்.

# 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகள் புதிதாக பம்பு செட் வாங்க 15,000 மானியம்: அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்



சென்னை,செப்.30

5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள சிறு, குறு விவசாயிகள் புதிதாக பம்பு செட் வாங்க 15,000 மானியம் வழங்கப்படும் என்று அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் புதிய பம்புசெட் வாங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

புதிய பம்பு செட் மொத்த தொகையில் 50% அல்லது ரூ.15,000 எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளனர்.

# தீபாவளி மற்றும் ஆயுத பூஜையை முன்னிட்டு தாம்பரம் - திருச்சி இடையே சிறப்பு விரைவு ரயில் இயக்கப்படும்: ரயில்வே



சென்னை,செப்.30

தீபாவளி மற்றும் ஆயுத பூஜையை முன்னிட்டு தாம்பரம் – திருச்சி இடையேசிறப்புவிரைவு ரயில் இயக்கப்படும் என ரயில்வே அறிவித்துள்ளது.

தாம்பரத்தில் இருந்து இரவு 10.30 மணிக்கு புறப்படும் ரயில் (06061) மறுநாள் காலை 6.10 மணிக்கு திருச்சி சென்றடையும். தாம்பரத்தில் இருந்து புறப்படும் ரயில் செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் போர்ட், சிதம்பரம் வழியாக செல்லும். சீர்காழி, மயிலாடுதுறை, கும்பகோணம், பாபநாசம், திருவெறும்பூர் வழியாக திருச்சி சென்றடையும்.

மறுமார்க்கமாக திருச்சியிலிருந்து அக்.1 இரவு 10.45க்கு புறப்படும் ரயில் (06062) மறுநாள் காலை 6.10க்கு தாம்பரம் வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செப்.26ல் சென்னை கோவை வந்தே பாரத் ரயிலில் இருந்து தவறி விழுந்து பயணி பலியான சம்பவத்தில் 2 ஊழியர்கள் சஸ்பெண்ட்




கோவை,செப்.30

செப்.26ல் சென்னை கோவை வந்தே பாரத் ரயிலில் இருந்து தவறி விழுந்து பயணி பலியான சம்பவத்தில் 2 ஊழியர்கள் சஸ்பெண்ட் செய்துள்ளார். விபத்து நிகழ்ந்த சி3 பெட்டியில் உள்ள சிசிடிவி காட்சியை சேலம் ரயில்வே கோட்ட மேலாளர் பங்ஜ்குமார் சின்ஹா ஆய்வு செய்தார். ரயிலின் அவசர கதவை ஊழியர்கள் 2 பேர் திறந்து வைத்ததால் பயணி உயிரிழந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மேட்டூர் காவலர் பயிற்சி பள்ளியில் பயிற்சி காவலர்கள் 54 பேர் காய்ச்சலால் பாதிப்பு



தருமபுரி,செப்.30

மேட்டூர் காவலர் பயிற்சி பள்ளியில் பயிற்சி காவலர்கள் 54 பேர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேட்டூர் அரசு மருத்துவமனையில் 14 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

40 பேர் பயிற்சி பள்ளி விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரனூர் சுங்கச்சாவடியில் தொடர் விடுமுறையால் வாகன நெரிசல்



செங்கல்பட்டு,செப்.30

தமிழ்நாட்டில் தற்போது பள்ளி மாணவர்களுக்கு காலாண்டு விடுமுறை விடப்பட்டுள்ளது. மேலும், நேற்று மிலாதுநபி பண்டிகையை முன்னிட்டு அரசு விடுமுறை விடப்பட்டு உள்ளது. மேலும், வரும் அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அரசு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதற்கிடையே வேலை நாளான இன்று (வெள்ளிக்கிழமை) மட்டும் விடுப்பு எடுத்து, தொடர் 5 நாள் விடுமுறையை கழிப்பதற்காக ஏராளமான மக்கள், தங்கள் குடும்பத்தினருடன் நேற்றிரவு முதல் தென்மாவட்டங்களில் உள்ள மதுரை, நெல்லை, தூத்துக்குடி, கோவை உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள சொந்த ஊர்களுக்கு அரசு பேருந்து, கார் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் படையெடுத்து வருகின்றனர். இதனால் செங்கல்பட்டு அருகே பரனூர் சுங்கச்சாவடி பகுதியில் நேற்று முதல் கடந்த 2 நாட்களாக வெளியூர் செல்லும் வாகனங்களினால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் பரனூர் சுங்கச்சாவடியில் ஏற்கெனவே தென்மாவட்டங்களுக்கு செல்லும் பகுதியில் 6 கவுன்டர்கள் இயங்கி வந்த நிலையில், நேற்று முதல் கூடுதலாக 2 கவுன்டர்கள் திறக்கப்பட்டு உள்ளன. எனினும், அங்கு வாகன நெரிசல் குறையவே இல்லை. மேலும், அங்கு வெளியூருக்கு அரசு பேருந்தில் செல்வதற்காக ஏராளமான பயணிகள் நீண்ட நேரம் காத்திருக்கின்றனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பும் பதட்டமும் நிலவி வருகிறது. இதுகுறித்து தென்மாவட்ட பயணி ஒருவர் கூறுகையில், தமிழ்நாட்டில் 5 நாட்கள் தொடர் விடுமுறை வருவது தெரிந்தும், பரனூர் சுங்கச்சாவடியில் வாகன நெரிசல் ஏற்படுவதை தடுக்க எவ்வித முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளவில்லை. இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் வாகனத்தில் காத்திருக்க வேண்டிய அவலநிலை நீடிக்கிறது என்று வேதனை தெரிவித்தார். இதுகுறித்து தகவலறிந்ததும் செங்கல்பட்டு போலீசார், பரனூர் சுங்கச்சாவடி பகுதியில் வாகன நெரிசலை சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

# பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.2,000 லஞ்சம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர் கைது

கோவை,செப்.30

பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.2,000 லஞ்சம் பெற்ற வடவள்ளி கிராம நிர்வாக அலுவலர் நவீன் கைது செய்யப்பட்டார். வடவள்ளி கிராம நிர்வாக அலுவலர் நவீன், உதவியாளர் மாணிக்கராஜ் ஆகியோரை லஞ்ச ஒழிப்பு போலீஸ் கைது செய்தது. மனோகரன் என்பவர் அளித்த புகாரை அடுத்து லஞ்சம் பெற்றபோது கையும் களவுமாக சிக்கினர் நவீன், மாணிக்கராஜ், ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கேளம்பாக்கம் அருகே சாலையில் விடப்படும் கழிவுநீரால் துர்நாற்றம்; பொதுமக்கள் அவதி



திருப்போரூர்,செப்.30

கேளம்பாக்கம் அருகே ஓஎம்ஆர் சாலையில் கழிவுநீர் விடும் தனியார் அடுக்குமாடி குடியிருப்பு நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்போரூர் ஒன்றியத்தில் கேளம்பாக்கம் மற்றும் படூர் ஊராட்சிகள் அருகருகே அமைந்துள்ளன. இங்கு தனியார் பல்கலைக்கழகம், மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி, கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. தனியார் அடுக்குமாடி குடியிருப்புகளும், வர்த்தக நிறுவன கட்டிடங்களும் ஓஎம்ஆர் சாலையில் அமைந்துள்ளது. இந்நிலையில், படூர் தனியார் மருத்துவக்கல்லூரி அருகேயுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து கழிவுநீர் ஓஎம்ஆர் சாலையில் விடப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

மருத்துவக்கல்லூரி நுழைவு வாயில் முன்பு பேருந்து நிறுத்தம் உள்ளது. இங்கு கல்லூரி மாணவர்கள், நோயாளிகள், பொதுமக்கள்பேருந்துக்காக காத்திருக்கின்றனர். இவர்கள் கழிவுநீரில் நின்றபடி பேருந்துக்காக காத்திருக்கும் அவலநிலை இருந்து வருகிறது. படூர் ஊராட்சியில் வெளியேற்றப்படும் கழிவுநீர் கேளம்பாக்கம் ஊராட்சி வரை ஓஎம்ஆர் சாலையில் ஆறுபோல் ஓடுகிறது. இந்த கழிவுநீரில் வாகனங்கள் செல்லும் போது சாலையில் செல்வோர்மீது கழிவுநீர்பட்டு துர்நாற்றம் வீசுகிறது. பல நாட்களாக கழிவுநீர் செல்வதால் தொற்றுநோய் பரவும் அபாயமும் உள்ளது. எனவே, ஓஎம்ஆர் சாலையில் கழிவுநீரைவிடும் தனியார் அடுக்குமாடி குடியிருப்பு நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 8 மீட்டரில் இருந்து 5 மீட்டராக தெருவிளக்குகளின் உயரம் குறைக்கும் பணி தீவிரம்




சென்னை,செப்.30

சென்னையில் இருக்கக்கூடிய தெரு விளக்குகளின்உயரங்களைகுறைக்கும்பணியில்மாநகராட்சி அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அடுத்தமாதம் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மழைகாலங்களில் மின்விளக்கு களில் ஏற்படும் சேதம் மற்றும் மின்தடை பிரச்னை ஏற்பட்டால் அதனை எளிதில் கையாள தற்போது 8 மீட்டராக உள்ள மின்விளக்கு கம்பங்களின் உயரத்தை 5 மீட்டராக குறைக்கும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல, மின்விளக்குகளின் உயரம் குறைக்கப்படுவதால் 110 வாட்களிலிருந்து 90 வாட் தெரு விளக்குகள் அமைக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, உயரம் குறைக்கபடுவதால் அதிகப்படியான வெளிச்சம் சாலைகளில் படும்பட்சத்தில் வாகனம் ஓட்டுவதில் எந்த ஒரு இடர்பாடும் ஏற்படாது என்றும், மேலும், மின்சாரத்தை சேமிக்கும் 2.86 லட்சம் எல்.இ.டி விளக்குகள் மாநகராட்சி நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேபோல, மின் விளக்குகளில் இருந்து வரக்கூடிய வெளிச்சத்தை மரக்கிளைகள் மறைப்பதால், வாகன ஓட்டிகளுக்கும், பாதசாரிகளுக்கும் சிரமம் ஏற்படுவதை தடுக்கும் வண்ணம் மரக்கிளைகள் அகற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மரங்கள் அதிகம் உள்ள பகுதிகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மின் விளக்குகளின் உயரம் குறைக்க ப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அடிப்படை வசதிகளை செய்யாமல் கட்டண வசூலில் சுங்கச்சாவடிகள் குறி' உயர் நீதிமன்றம் அதிருப்தி




மதுரை,செப்.30

அடிப்படை வசதிகளை செய்யாமல் கட்டணம் வசூலிப்பதில் மட்டும் சுங்கச்சாவடிகள் குறியாக இருப்பதாக உயர்நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

மதுரையைச் சேர்ந்த மகாராஜன், உயர் நீதி மன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: ''மதுரைகன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் கயத்தாறு மற்றும் நாங்குநேரியில் சுங்கச்சாவடிகள் உள்ளன. கயத்தாறு பொன்னாகுடி செங்குளம் பகுதியிலும், நாங்குநேரி சுங்க ச்சாவடிக்கு உட்பட்ட மூன்றடைப்பு பகுதியிலும் சுமார் 3 ஆண்டுகளாக பாலம் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சுமார் 4 கி.மீட்டர் வரை கரடு, முரடான பாதையில் வாகனங்கள் செல்ல வேண்டியதுள்ளது. காலை, மாலை நேரத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

சுங்கச்சாவடிகளில் அடிப்படை வசதிகள் இல்லை. சுங்கச்சா வடியில் பணிபுரியும் பலர் மீது குற்றவழக்குகள் உள்ளன. விதிமீறல் குறித்து கேள்வி எழுப்பினால்சுங்கச்சாவடி ஊழியர்கள் தாக்குதலில் ஈடுபடுகின்றனர்.

போதிய மின் விளக்கு வசதி இல்லாததால் நெடுஞ்சாலையின் பெரும்பாலான பகுதி இருள் சூழ்ந்துள்ளது.

இந்தக் குறைபாடுகளை சரி செய்யாமல் சுங்கச்சாவடி கட்டணம் வசூலிப்பது சட்ட விரோதம். எனவே உரிய அடிப்படை வசதிகள் செய்யப்படும் வரைகயத்தாறு, நாங்குநேரி சுங்கச்சாவடிக ளில் கட்டணம் வசூலிக்க இடைக்கால தடை விதித்து உத்தரவிட வேண்டும்'' என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ''தேசிய நெடுஞ்சாலைத் துறைசாலைகளைமுறையாக பராமரிப்பது இல்லை. சுங்கச்சாவடிகள் வாகன ஓட்டிகளிடம் கட்டணம் வசூலிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன.

மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலை மிக மோசமான நிலையில் உள்ளது.

ஒரே இடத்தில் 14 விபத்துக்கள் நடந்துள்ளன. மனு குறித்து தேசிய நெடுஞ்சாலைத் துறை பதிலளிக்க வேண்டும்'' என உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# மின் நுகர்வோர் கூட்டமைப்பு அக்.16ல் உண்ணாவிரத போராட்டம்




சென்னை,செப்.30

சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மின்கட்டண உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தி அக்.16ல் சென்னையில் உண்ணாவிரத போராட்டத்தை நடத்த உள்ளதாக தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பினர் சார்பில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதன் பின் கூட்டமைப்பினர் நிருபர்களிடம் கூறுகையில்,

''பேச்சுவார்த்தையில் எந்த தீர்வும் கிடைக்கவில்லை. திட்டமிட்டபடி அக்டோபர் 16ம் தேதி சென்னையில் கவன ஈர்ப்பு உண்ணாவிரத போராட்டத்தை நடத்த உள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அமைச்சர்கள் வழக்குகளை விசாரித்து வரும் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் மதுரை கிளைக்கு மாற்றம்



மதுரை,செப்.30

அமைச்சர்கள் பொன்முடி, தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன் ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து வரும் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் அக்டோபர் 3 முதல் 3 மாதங்களுக்கு உயர் நீதிமன்ற மதுரை கிளைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் 3 மாதத்துக்கு ஒருமுறை உயர் நீதிமன்ற மதுரை கிளை பணிக்கு மாற்றப்படுவது வழக்கம்.

அதன்படி அக்டோபர் 3ம் தேதி முதல் 3 மாதங்களுக்கு உயர் நீதிமன்ற கிளையில் வழக்குகளை விசாரிக்கும்நீதிபதிகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரம்:

நீதிபதிகள் எம்.சுந்தர், ஆர்.சக்திவேல் ஆகியோர் முதல் அமர்வில் பொதுநலன் மனு, ஆள் கொணர்வு மனு, குற்றவியல் மேல்முறையீடு மனுக்களையும், நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், வி.லெட்சுமிநாராயணன் 2வது அமர்வில் ரிட் மனுக்கள், ரிட் மேல்முறையீடு மனுக்களையும், நீதிபதிகள் ஆர்எம்டி டீக்காராமன், பி.பி.பாலாஜி ஆகியோர் 3வது அமர்வில் உரிமையியல் மேல்முறையீடு மனுக்களையும் விசாரிக்கின்றனர்.

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 2022ம் ஆண்டிலிருந்தும், நீதிபதி என். ஆனந்த வெங்கடேஷ் (அமைச்சர்கள் மீதான சொத்து குவிப்புக் வழக்கின் மேல்முறையீடு மனுக்களை விசாரித்து வருபவர்) 2020 மற்றும் 2021ம் ஆண்டில் தாக்கலான கனிமம், நில சீர்திருத்தம், நில உச்சவரம்பு, நிலம் கையகப்படுத்தல், சுதந்திர போராட்ட தியாகிகள் தொடர்பான ரிட் மனுக்களையும், நீதிபதி பி.புகழேந்தி 2019 வரையிலான வரி, சுங்கம், கலால், வனம், தொழில், மோட்டார்வாகனம், அறநிலையத் துறை மனுக்களை விசாரிக்கின்றனர்.

நீதிபதி பட்டு தேவானந்த், 2019 வரையிலான உரிமையியல் மனுக்களையும், நீதிபதி ஜி.சந்திரசேகரன், 2021ம் ஆண்டிலிருந்து தாக்கலான இரண்டாவது மேல்முறையீடு, உரிமையியல் மேல்முறையீடு மனுக்களையும், நீதிபதி வி.சிவஞானம், ஜாமீன், முன்ஜாமீன் மனுக்களையும், நீதிபதி ஜி.இளங்கோவன், 2022 ஆண்டு முதலான குற்றவியல் நடைமுறைச் சட்டம் 407, 482 பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்படும் குற்றவியல் உண்மை மனுக்களையும் விசாரிக்கின்றனர்.

நீதிபதி கே.முரளிசங்கர் 2020 முதலான உரிமையியல் மனுக்களையும், நீதிபதி எஸ்.ஸ்ரீமதி, 2017 முதல் 2020 வரையிலான இரண்டாவது மேல்முறையீடு மனுக்களையும், நீதிபதி ஆர்.விஜயகுமார், 2020 முதலான தொழிலாளர், அரசுப் பணி தொடர்பான ரிட் மனுக்களையும், நீதிபதி எல். விக்டோரியாகவுரி 2020 வரையிலானமுதல்மேல் முறையீடு, உரிமையியல் மேல்முறையீடு, 2வது மேல்முறையீடு மனுக்களையும் விசாரிக்கின்றனர்.

நீதிபதி கே.கே.ராமகிருஷ்ணன், 2021 ஆண்டு வரையிலான குற்றவியல் உண்மை மனுக்கள், பெண்கள், குழந்தைகள் தொடர்பான வழக்குகளின் குற்றவியல் மேல்முறையீடு மனுக்கள், குற்றவியல் சீராய்வு மனுக்களையும், நீதிபதி ஆர்.கலைமதி, 2016 வரையிலான இரண்டாவது மேல்முறையீடு மனுக்கள், நீதிபதி பி.வடமலை, சிபிஐ, லஞ்ச ஒழிப்பு 2022 முதலானது குற்றவியல் சீராய்வு மனு, பெண்கள், குழந்தைகள் தொடர்பான மனுக்களின் மேல்முறையீடு மனுக்களையும் விசாரிக்கின்றனர்.

# கா காவிரி பிரச்சினை, சிவராஜ் குமார் தலைமையில் கன்னட திரையுலகினர் போராட்டம் கர்நாடக பந்த் தாக்கம் எப்படி?



பெங்களூரு,செப்.30

தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்கப்படுவதைக் கண்டித்து கர்நாடகாவில் இன்று முழு அடைப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டத்துக்கு கன்னட திரையுலகம் ஆதரவு தெரிவித்துள்ளது. நடிகர் சிவ ராஜ் குமார் தலைமையில் கன்னட திரையுலகினர் திரண்டுள்ளனர். கர்நாடக திரைப்பட வர்த்தக கூட்டமைப்பு அலுவலகம் அருகே கன்னட திரைப் பிரபலங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முடங்கிய மைசூரு: மைசூருவில் பந்த் காரணமாக இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் உடுப்பு, தக்சின் கன்னடா பகுதியில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்கள் வழக்கம்போல் இயங்குகின்றன. தமிழகத்தை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் கன்னட அமைப்பினர், விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றனர். எல்லையில் போக்குவரத்து முடக்கம்: முழு அடைப்பு காரணமாக் தமிழக கர்நாடகா இடையேயான போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தமிழகத்துக்குச் செல்லும் வாகனங்கள் ஜூஜூவாடி, பண்ணாரி, குரங்கணி எனப் பல பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

தமிழக எல்லையை ஒட்டிய பகுதியில் திரண்ட கன்னட அமைப்பினர்

இது ஒருபுறம் இருக்க, கர்நாடகாவில் இறந்து போன நபரின் ஈமச்சடங்கில்பங்கேற்கமுடியாமல், காரப்பள்ளம் சோதனைச் சாவடியில் தவித்த உறவினர்களை கர்நாடகாவுக்குள் செல்ல அனுமதியளித்தனர்.

புளிஞ்சூர் சோதனைச் சாவடி வரை தாளவாடி போலீஸார் அவர்களுடன் சென்று வழி அனுப்பி வைத்தனர்.

ஃப்ரீடம் பார்க்: பெங்களூருவில்கன்னடஅமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். சாலை மறியல் நடத்துகின்றனர். இதுவரை போராட்டங்கள்அமைதியானமுறையிலேயே நடைபெற்று வருகின்றன. ஃப்ரீடம் பார்க் பகுதியில் மட்டுமே போராட்டங்கள் அனுமதிக்கப்படுவதால் அத்தனை போராட்டக்காரர்களும் அங்கேயே குவிகின்றனர். அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அங்கு வந்து போராடுபவர்கள் சில நிமிடங்களில் அப்புறப்படுத்தப்பட்டு பத்திரமாக வாகனங்களில் ஏற்றி குறிப்பிட்ட சில இடங்களில் காவலில் வைக்கப்படுகின்றனர். அனைவரும் மாலை 6 மணிக்கு மேல் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

ஃப்ரீடம் பார்க் தவிர்த்து டவுன் ஹால், சேட்டிலைட் பஸ் நிலையம் காந்திநகரில் திரட்ட போராட்டக்காரர்கள் தடுத்து காவலில் எடுக்கப்பட்டனர். அதன்படி கர்நாடக ரக்‌ஷன வேதிகே அமைப்பில் ப்ரவீன் ஷெட்டி, ஆர்டி நகரில் போராட முயன்றபோது கைது செய்யப்பட்டார்.

12,500 குறையக்கூடாது: முன்னதாக, இன்று நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை வாரிய அவசரக் கூட்டத்தில், தமிழகத்துக்கு, 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்" என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்திருந்தார். செய்தியாளர்கள் சந்திப்பில் அவர், "எங்களுடைய வாதம் ஒன்றுதான். அது காவிரி மேலாண்மை வாரியமாக இருந்தாலும் சரி, காவிரி ஒழுங்காற்றுக் குழுவாக இருந்தாலும் சரி, நாங்கள் கேட்பது தமிழகத்துக்கு 12500 கன அடி தண்ணீர்தேவை. ஆனால், காவிரி ஒழுங்காற்று க் குழு 5000 கன அடி தண்ணீர் திறக்கத்தான் உத்தரவிட்டது. அந்த தண்ணீர் போதவில்லை. இதனால் பயிர்கள் காய்ந்து போகின்றன. எனவே, காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்திலும், நாங்கள் 12,500 கன அடி தண்ணீர் திறக்கவே கோரிக்கை வைப்போம்.

இதுவரையில் காவிரியில்தண்ணீர்வந்துகொண்டிருக்கிறது.

ஆனால், இந்த தண்ணீர் திறப்பு குறுவைக்கு போதுமானது என்று சொல்லமுடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பரவாயில்லை அவ்வளவுதான்" என்று கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# குன்னூரில் பாஜக தலைவர் அண்ணாமலை "என் மண்,என் மக்கள்" பாதையாத்திரை



நீலகிரி,செப்.30

நீலகிரி மாவட்டம் குன்னூரில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் என் மண்,என் மக்கள் பாதையாத்திரை குன்னூரில் உள்ள சிம்ஸ்பார்க் பகுதியில் துவங்கி நடைபெற்று வருகிறது...

தமிழக பாஜகதலைவர் பாரதிய ஜனதா கட்சியின் ஒன்பது ஆண்டுக்கால சாதனையை மக்களிடத்தில் கொண்டு செல்லும் வகையில் தமிழகம் முழுவதும் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தநடைபயணத்தை மத்தியஉள்துறைஅமைச்சர் அமித்ஷா ராமேஸ்வரத்தில் கடந்த ஜூலை 28ம் தேதி துவக்கி வைத்த நிலையில், இந்த நடைபயணம் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

இதனைத்தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் தனது நடைபயணத்தை துவங்கிய தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை கூடலூர், உதகையில் நடைபயணம் மேற்கொண்டு நிறைவு பெற்ற நிலையில், குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்காவில் இருந்து என் மண்,என் மக்கள் நடைபயணம் தற்போது கொட்டும் மழையிலும் நடைபெற்று வருகிறது.

நடைபயணமானது குன்னூரில் முக்கிய பிரதான வீதிகள் வழிகளான பெட்போர்டு, YMCA, மவுண்ட் ரோடு வழியாக பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள வி.பி.திடலில் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

தற்போதுஎன்மண்,என் மக்கள் நடைபயணத்தை ஒட்டி நீலகிரி மாவட்டத்தில் வாழும் படுகர் இன மக்கள் தங்களின் பாரம்பரிய நடனம் ஆடி உற்சாக வரவேற்பு அழித்தனர்.

மேலும் சாலையின் இருபுறமும் நடைபயணம் மேற்க் கொள்ளும் அண்ணாமலைக்கு மலர்கள் தூவி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

## காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கோரி நாம் தமிழர் கட்சியினர் போராட்டம்

சென்னை,செப்.30

காவிரியில் கர்நாடகா உரிய தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி நாம் தமிழர் கட்சியின் சார்பில் 40 இடங்களில் போராட்டம் நடைபெறுகிறது. மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் இந்த போராட்டத்தில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். நாம் தமிழர் கட்சியின் மத்திய மண்டல செயலாளர் வக்கீல் ஸ்ரீதர் தலைமையில் சென்னை கலெக்டர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

## தமிழகம் முழுவதும் தினமும் காய்ச்சல் பரிசோதனை முகாம்களை நடத்த உத்தரவு

சென்னை,செப்.30

தமிழகம் முழுவதும் தினமும் காய்ச்சல் பரிசோதனை முகாம்களை நடத்த பொது சுகாதாரத்துறை உத்தரவு அளித்துள்ளனர். தினமும் 1,000 இடங்களில் மறு உத்தரவு வரும் வரை காய்ச்சல் பரிசோதனை முகாம்களை நடத்த உத்தரவு அளித்துள்ளனர்.

வைரஸ், டெங்கு என மழைக்கால நோய்கள் பரவி வரும் நிலையில் நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## ஈரோட்டில் லோட்டஸின் வாக்கத்தான், மாரத்தான் பேரணி

ஈரோடு,செப்.30

ஈரோடு மாவட்டம் ரயில் நிலையம் அருகில் உள்ள லோட்டஸ் மருத்துவமனை சார்பில் செப்டம்பர் 29 ம் தேதி உலக இருதய தினத்தை முன்னிட்டு "நம்ம லோட்டஸின் வாக்கத்தான் மற்றும் மாரத்தான்" நிகழ்ச்சியை லோட்டஸ் மருத்துவமனை வளாகத்தில் இருந்து ஈரோடு மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் சேகர் கொடி அசைத்து துவங்கிவைத்தார். இந் நிகழ்ச்சியில் ஈரோடு லோட்டஸ் ஆஸ்பிட்டலின் நிர்வாக இயக்குநர் கே சகாதேவன், இணை இயக்குநர் எஸ் குமரன் மற்றும் இருதய சிகிச்சை நிபுணர் எம்ஜெகதீஷ் ஆகியோர் பொதுமக்களுக்கு இருதய பாதுகாப்பு, இருதய நோய் வர காரணிகள் மற்றும் தடுக்க வழிகள் குறித்து விளக்கவுரை ஆற்றினார்கள். இந்த பேரணியில் சங்கங்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். இந்த பேரணி தோராயமாக 4 கிலோமீட்டர் தொலைவு நடைபெற்றது. இதில் சுமார் 1500 பேர் கலந்து கொண்டவர்களில் முதல் பரிசு ஆ. அபிசேக், இரண்டாவது பரிசு என் எஸ் ரிதிஸ், மூன்றாவது பரிசு ஜி அபினேஷ் ஆகியோர் பெற்றார்கள். மேலும் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.



## பிரபாஸின் 'சலார்' டிசம்பர் 22 ரிலீஸ் அதிகாரபூர்வ அறிவிப்பு

ஹைதராபாத்,செப்.30

'கேஜிஎஃப்' பிரசாந்த் நீல் இயக்கத்தில் பிரபாஸ் நடிக்கும் 'சலார்' திரைப்படம் வரும் டிசம்பர் 22ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

'கேஜிஎஃப் 2' படத்துக்குப் பிறகு பிரசாந்த் நீல் இயக்கும் படம், 'சலார்'. ஹோம்பாளே பிலிம்ஸ் சார்பில் விஜய் கிரகந்தூர் பிரம்மாண்டமானப் பொருட்செலவில் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார். இதில் பிரபாஸ், ஸ்ருதிஹாசன், பிருத்விராஜ், ஜெகபதி பாபு உட்பட பலர் நடிக்கின்றனர்.

தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாள மொழிகளில் வெளியாக இருக்கிறது. கடந்த 28ம் தேதி வெளியாக இருந்த இந்தப் பதவிர்க்க முடியாத காரணங்களால் தள்ளி வைக்கப்பட்டதாகவும், புதிய ரிலீஸ் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் படக்குழு சமீபத்தில் அறிவித்தது.

படத்தின் ரிலீஸ் எப்போது என்று ரசிகர்கள் கேள்வி எழுப்பி வந்த நிலையில், 'சலார்' திரைப்படம் வரும் டிசம்பர் 22ஆம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆக்‌ஷனுடன் தந்தை மகன் உறவு: ரன்பீர் ராஷ்மிகாவின் 'அனிமல்' டீசர் எப்படி?



ரன்பீர் கபூர் நடித்துள்ள 'அனிமல்' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. இயக்குநர் சந்தீப் ரெட்டி வாங்கா இயக்கத்தில் ரன்பீர் கபூர் நடிக்கும் படம் 'அனிமல்'.

ராஷ்மிகா மந்தனா நாயகியாக நடிக்கும் இப்படத்தில் அனில் கபூர், பாபி தியோல், சுரேஷ் ஓப்ராய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ப்ரீதம், விஷால் மிஸ்ரா, மனன் பரத்வாஜ், ஷ்ரேயாஸ் பூரணிக், ஜானி, ஆஷிம் கெம்சன் உள்ளிட்டோர் படத்துக்கு இசையமைத்துள்ளனர். டி சிரீஸ், சினி ஒன் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இப்படத்துக்கு அமீத் ராய் ஒளிப்பதிவு செய்கிறார்.

ஆகஸ்ட் 11ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்ட இப்படம் டிசம்பர் 1ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் படத்தின் டீசர் வெளியிடப்பட்டுள்ளது.

## இவன் வேட்டைக்கு சிதறனும் பயந்து.. லியோ பாடலை ட்ரெண்டாக்கும் ரசிகர்கள்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ



தாமஸ் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. 'லியோ' திரைப்படம் அக்டோபர் மாதம் 19ம் தேதி வெளியாக உள்ளது. இதையடுத்து இப்படத்தின் இரண்டாவது பாடலான 'BADASS' பாடலின் லிரிக் வீடியோ நேற்று வெளியானது. இந்த பாடல் வெளியான ஒரே நாளில் 10 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளது. இதனை படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது. இந்த பாடலை ரசிகர்கள் தொடர்ந்து இணையத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

## தன் இளைய மகளுடன் திரைப்பட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விஜய் ஆண்டனி

இயக்குனர் சி.எஸ்.அமுதன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரத்தம்'.இந்த படத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.



இப்படம் வருகிற அக்டோபர் 6ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில், 'ரத்தம்' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது.

இதில் நடிகர் விஜய் ஆண்டனி தனது இளைய மகள் லாராவுடன் கலந்து கொண்டார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது. விஜய் ஆண்டனியின் மூத்த மகள் மீரா சமீபத்தில் தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவத்திற்கு பிறகு முதல் முறையாக விஜய் ஆண்டனி திரைப்படம் சார்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

## நடிகர் சித்தார்த்துக்கு கன்னட அமைப்பினர் எதிர்ப்பு பிரகாஷ் ராஜ் கண்டனம்



பண்ணையாரும் பத்மினியும்', 'சேதுபதி', 'சிந்துபாத்' உள்ளிட்ட படங்களை இயக்கிய அருண்குமார் இயக்கத்தில் நடிகர் சித்தார்த் நடித்துள்ள திரைப்படம் 'சித்தா'. இந்த படத்தை நடிகர் சித்தார்த் தன்னுடைய இடாகி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் தயாரித்துள்ளார். இந்த திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நேற்று வெளியாகி உள்ளது. இந்த நிலையில் 'சித்தா' படத்தின் புரொமோஷன் நிகழ்ச்சிக்காக நடிகர் சித்தார்த் பெங்களூரு சென்றுள்ளார். அங்கு நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு நடிகர் சித்தார்த் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கன்னட அமைப்பினர் இந்த புரொமோஷன் நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். காவிரி விவகாரத்தில் கன்னட அமைப்பினர், தமிழ்நாட்டிற்கு கண்டனம் தெரிவித்து வரும் நிலையில் தமிழ் நடிகரான சித்தார்த்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கன்னட அமைப்பினரின் எதிர்ப்பைத் தொடர்ந்து மேடையில் இருந்து நடிகர் சித்தார்த் வெளியேறினார். இதையடுத்து அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது. இந்நிலையில் சித்தார்த்தை தொந்தரவு செய்வதை ஏற்க முடியாது என்று நடிகர் பிரகாஷ் ராஜ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "நீண்ட காலமாக இருக்கும் பிரச்சனையை தீர்க்காமல் வைத்திருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும், மத்திய அரசை தலையிட வைக்க அழுத்தம் கொடுக்காத எம்.பி.க்களையும் கேட்பதற்கு பதிலாக, சாதாரண மக்களையும், சித்தார்த் போன்ற கலைஞர்களையும் தொந்தரவு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு கன்னடராக அனைத்து கன்னட மக்களின் சார்பாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்று அதில் பிரகாஷ் ராஜ் பதிவிட்டுள்ளார்.

## விஜய் ஆண்டனியின் 'ஹிட்லர்' ஃபர்ஸ்ட் லுக் மோஷன் போஸ்டர் வெளியீடு



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான சூர்யா தற்போது, இயக்குனர் சிவா இயக்கத்தில் 'கங்குவா' படத்தில் நடித்து வருகிறார். ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை திஷாபதானி, யோகி பாபு, கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். 3டி முறையில் சரித்திர படமாக 10 மொழிகளில் வெளியாகவுள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 'கங்குவா' திரைப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நடிகர் சூர்யா விபத்தில் உயிரிழந்த ரசிகர் வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார். அதாவது, சூர்யா நற்பணி இயக்கத்தைச் சேர்ந்த அரவிந்த் (24) என்பவர் கடந்த 24.08.2023 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார். இந்த செய்தியறிந்த நடிகர் சூர்யா எண்ணூரில் உள்ள ரசிகரின் வீட்டுக்கு நேரில் சென்று தனது அஞ்சலியை செலுத்திவிட்டு, அவரின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினார்.

இது தொடர்பான புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## இங்கிலாந்து அணி வேட்டைக்கு தயார்!



இங்கிலாந்து அணி வீரர்கள் இந்தியாவில் வரும் அக்டோபர் 5ம் தேதி தொடங்க உள்ள உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் கோப்பையைத் தக்கவைத்துக் கொள்ளும் முனைப்புடன் களமிறங்குகிறது நடப்பு சாம்பியனான இங்கிலாந்து அணி. ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பேட்டிங்கில் ஆக்ரோஷ அணுகுமுறையை பின்பற்றி வரும் அந்த அணி உலகக் கோப்பை தொடருக்காக ஆல்ரவுண்டர் பென் ஸ்டோக்ஸை திரும்ப அழைத்து வந்துள்ளது. 2019ம் ஆண்டு இங்கிலாந்து அணி சாம்பியன் பட்டம் வென்று வரலாற்று சாதனை நிகழ்த்த பென் ஸ்டோக்ஸ் முக்கிய பங்களிப்பை வழங்கி இருந்தார். இம்முறையும் அவர் துருப்பு சீட்டாக இருக்கக்கூடும்.கடந்த ஆண்டில் நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து 498 ரன்களை வேட்டையாடி பிரம்மிக்க வைத்தது. இந்த வேட்டையை உலகக் கோப்பை தொடரிலும் நிகழ்த்த இங்கிலாந்து அணி ஆயத்தமாகி உள்ளது. இங்கிலாந்து அணி கோப்பையை வெல்லும் பட்சத்தில் மேற்கு இந்தியத் தீவுகள், ஆஸ்திரேலிய அணிக்கு பிறகு தொடர்ச்சியாக இரு முறை கோப்பையை வென்ற அணி என்ற பெருமையை பெறும்.



## தோனி, ரோகித் சர்மாவை சுட்டிக்காட்டி தமிம் இக்பாலை சாடிய ஷாகிப் அல் ஹசன்!

கிரிக்கெட்டிலிருந்து ஒய்வு அறிவித்திருந்த தமிம் இக்பால் பிறகு வங்கதேச பிரதமரின் தலையீட்டினால் ஒய்வை முடித்துக் கொண்டு மீண்டும் ஆட வந்தார். இந்நிலையில், இவருக்கும் கேப்டன் ஷாகிப் அல் ஹசனுக்கும் மோதல் முற்றியதால், தமிம் இக்பாலை அணியில் சேர்க்க ஷாகிப் விரும்பவில்லை என்ற விவகாரம் பெரிய சர்ச்சைகளை அங்கு கிளப்பியுள்ளது. அதாவது, தமிம் இக்பால் உலகக் கோப்பையில் 5 போட்டிகளில் மட்டும்தான் ஆட முடியும் என்று கூறியதாகவும், ஃபிட்னெஸ் இல்லாதவரை எடுக்கக் கூடாது என்றும், மீறி எடுத்தால் தான் உலகக் கோப்பை அணியிலிருந்தே விலகிவிடுவேன் என்றும் ஷாகிப் மிரட்டியதாக செய்திகள் வெளியானது. இந்நிலையில், தமிம் இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக தன்னை மிடில் ஆர்டரில் இறங்க ஷாகிப் வலியுறுத்தியதாகவும், 5 போட்டிகளில் மட்டுமே ஆட முடியும் என்று தான் கூறவே இல்லை என்றும், சமூக ஊடகத்தில் வெளியிட, ஷாகிப் அல் ஹசன், தமிம் இக்பாலை 'சிறுபிள்ளைத்தனமானவர்' என்று சாடியுள்ளார். இது தொடர்பாக தமிம் வெளியிட்ட வீடியோவில், தன்னை முதல் போட்டியில் ஆட வேண்டாம் என்றும் பிறகு மிடில் ஆர்டரில் இறங்கினால் அணியில் இருக்கலாம் என்று கூறியதாகவும் குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார். அதாவது, தனக்கு மிடில் ஆர்டரில் இறங்க விருப்பமில்லை என்றும் தமிம் அந்த வீடியோவில் தெரிவித்தார். இந்நிலையில், தமிம் இக்பாலுக்கு பதிலடி கொடுத்த கேப்டன் ஷாகிப் அல் ஹசன், டிஸ்போர்ட்ஸில் கூறும்போது, "அதிகாரம் படைத்த ஒருவர்தான் தமிம் இக்பாலை மிடில் ஆர்டரில் இறங்கச் சொல்லியிருக்கிறார். அதில் என்ன தவறு? சொன்னவர் அணியின் நன்மைக்காகவே சொல்லியுள்ளார். ஒரு போட்டிக்கு அணிச்சேர்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதில் நிறைய காரணிகள் செயல்படும். அதில் இதுவும் ஒன்று. ஏன் மிடில் ஆர்டரில் இறங்கு என்று யாரும் அவருக்குக் கூறக்கூடாதா? அணி முக்கியமா தனி வீரர் முக்கியமா? ரோகித் சர்மா 7ம் நிலையிலிருந்து தொடக்க வீரராக உயர்ந்து 10,000 ரன்கள் எடுக்கவில்லையா? ரோகித் சர்மாவே சில வேளைகளில் 3 அல்லது 4ம் நிலையில் இறங்குகிறார். அதில் என்ன தவறு, என்ன கெட்டு விடும்? எனவே, இதையெல்லாம் ஒரு காரணமகாக் கூறுவது சிறுபிள்ளைத்தனம் இல்லாமல் வேறு என்னவாம்? ஒரு வீரர் அணிக்காக எந்த நிலையிலும் இறங்கத் தயாராக இருக்க வேண்டும். அணி தோற்று விட்டால் ஒருவர் 100 எடுத்தாலும் 200 எடுத்தாலும் வித்தியாசம் ஒன்றுமில்லை. தமிம் நீங்கள் அணியைப் பற்றி சிந்திக்கிறீர்களா? இல்லையே! ரசிகர்களுக்கு இவையெல்லாம் புரியவே புரியாது. அணிக்காகத்தானே இவரை மிடில் ஆர்டரில் இறங்க சொல்கிறார். அதில் என்ன தவறு? இதற்கு ஒத்துக் கொண்டால் தான் நீ அணிக்கான வீரர். இப்படி யோசிக்கவில்லை எனில் நீங்கள் தனிப்பட்ட வீரர்தான். அணி வீரர் அல்ல. தனிப்பட்ட சாதனை, புகழ் பெயருக்காக ஆடுபவர் தான் நீங்கள். அணிக்காக ஆடுபவர் அல்ல. தோனி ஒருமுறை கூறினார். அவர் பெறாத வெற்றிகளா, அவருக்கு இல்லாத அறிவா, என்ன சொன்னார் தெரியுமா... 'உடற்தகுதி இல்லாமல் ஆடும் வீரர் அணியையும் நாட்டையும் ஏமாற்றுபவர்' என்றார். இதை தமிம் மட்டுமல்ல நாம் அனைவருமே ஏற்க வேண்டும்" என்றார்.

## ஆசிய விளையாட்டுப் போட்டி: துப்பாக்கிச்சுடுதல் இந்தியாவிற்கு மேலும் ஒரு தங்கம், வெள்ளி!



ஆசிய விளையாட்டுப் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீராங்கனை பாலக் தங்கம் வென்றார். 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் மற்றொரு இந்திய வீராங்கனை ஈஷா சிங் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.